**மே – 09**

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம் – நீட்டிப்பு

- 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தையும் (12th Five Year Plan) தாண்டி 2019-20 ஆண்டு வரையிலும் பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம் (Pradhan Mantri Swasthya Suraksha Yojana-PMSSY) தொடர்வதற்கு பிரதமர் தலைமையிலான மத்திய கேபினேட் குழு அனுமதியினை வழங்கியுள்ளது.

***பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம்***

- நாட்டில் தரமான மருத்துவ கல்வி கிடைப்பதற்காக மலிவான/நம்பகமான (affordable/reliable) மூன்றாம் நிலை சுகாதாரச் சிகிச்சை சேவைகள் (tertiary healthcare services) மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளைப் பெறுவதில் காணப்படுகின்ற பிராந்திய சம நிலையின்மைகளை (regional imbalances) சரி செய்வதே பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டமானது 2003-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வெவ்வேறு அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அப்பாற்பட்டு இந்தியாவினுடைய பல்வேறு பிராந்தியங்களில் எய்ம்ஸ் (AIIMS) மருத்துவக் கல்லூரிகளை இத்திட்டம் ஏற்படுத்துகின்றது.
- பொது சுகாதாரம் மீது உள்கட்டமைப்புகளை உருவாக்குதலோடு தொடர்புடைய வெவ்வேறு மத்திய நிதியுதவித் திட்டங்கள் (centrally sponsored schemes) மூலம் இத்திட்டத்திற்கு நிதியளிக்கப்படுகின்றது.

## வர்த்தக பிரச்சனைகளுக்கு விரைவான தீர்ப்பு வழங்கலுக்கான சட்டம்

- உலக வங்கியின் எளிதில் வணிகம் செய்யும் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசையை அதிகரிப்பதற்காக வர்த்தக பிரச்சனைகளின் விரைவான தீர்ப்பு வழங்குகைக்கான வர்த்தக பிரச்சனை தீர்ப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான அவசரச் சட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- மத்திய அமைச்சரவையானது வர்த்தக நீதி மன்றங்கள், வர்த்தகப் பிரிவுகள், உச்ச நீதிமன்றத்தின் வர்த்தக மேல் முறையீட்டுப் பிரிவுகள் சட்டத்தினை (Commercial Courts, Commercial Division and Commercial Appellate Division of High Courts Act) திருத்துவதற்கான அவசரச் சட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த சட்ட திருத்தமானது, சென்னை, டெல்லி, கொல்கத்தா மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் உயர் நீதி மன்றங்கள் எந்தெந்த பகுதிகள் மீது சாதாரண நேரடி சிவில் அதிகாரத்தை கொண்டுள்ளனவோ அப்பகுதிகளில் மாவட்ட அளவில் வர்த்தக நீதிமன்றங்களை அமைக்க வழி அமைக்கின்றது.

## இந்தியச் சுரங்கப் பணியகத்தின் மறுசீரமைப்பு

- சுரங்கத் துறையின் ஒழுங்குமுறைகளை (mineral sector regulation) சீர்திருத்துவதற்காக இந்தியச் சுரங்கப் பணியகத்தை (Indian Bureau of Mines) மறுகட்டமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளளது.

- 2008-ஆம் ஆண்டு மத்திய சுரங்க அமைச்சகமானது (Ministry of Mines) தேசிய கனிம கொள்கையின் (National Mineral Policy) கூறுகளினுடைய வழிகாட்டுதல் வெளிச்சத்தின் படி, விரிவான இந்திய சுரங்கப் பணியகத்தின் செயற்பாத்திரம் மற்றும் செயல்பாடுகளுக்கான மறுகட்டமைப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக (panel for comprehensive 'Review and Restructuring of the Functions and Role of IBM) ஓர் குழுவை அமைத்தது.
- இந்த மறுகட்டமைப்பானது சுங்கத்துறை மற்றும் மேம்பாட்டு விவகாரங்களில் செயல்திறனை மேம்படுத்த பணியகத்தால் தகவல் தொடர்பு மற்றும் விண்வெளித் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு இயலச் செய்திடும்.
- இணைச் செயலாளர் (Joint Secretary) அளவிலான பதவி மற்றும் அதற்கும் மேலான பதவி போன்ற சில பதவிகளை உருவாக்குதல், அழித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவற்றின் மூலம் இந்திய சுரங்கப் பணியகம் மறுகட்டமைக்கப்பட உள்ளது. மேலும் இந்த மறுகட்டமைப்பானது சுரங்கங்களின் முதன்மைக் கட்டுப்பாட்டாளர் (Chief Controller of Mines) எனும் புதிய பதவியையும், சுரங்கக் கட்டுப்பாட்டாளர் (Controller of Mines) எனும் பதவியையும் உருவாக்குவதை உள்ளடக்கி உள்ளது.

## பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பு மீதான கூட்டிணைவு

- பேரிடர் ஆபத்து குறைப்பு (Disaster Risk Reduction) மீது பரிந்துரைகளை வழங்க மத்திய உள்துறை அமைச்சகமானது (Home Ministry) ஓர் செயற் பணிப்படையை (task force) அண்மையில் அமைத்தது.
- தற்போது இந்த செயற் பணிப்படையானது பேரிடர் ஆபத்து குறைப்பு மீது தன்னுடைய அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் சமர்ப்பித்துள்ளது.
- மத்திய வெளியுறவு விவகாரத் துறை அமைச்சகத்தின் (Ministry of External Affairs) கிழக்குப் பிரிவு செயலாளரான பிரித்தி சரண் இந்த செயற் பணிப்படையின் தலைவராவார்.
- பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பு மீது கூட்டிணைவை (Coalition on Disaster Resilient Infrastructure) ஏற்படுத்துதல் மீதான இந்த அறிக்கையானது, பேரிடர் ஆபத்து குறைப்பிற்கென ஓர் கூட்டிணைவை உருவாக்குவதோடு அவற்றை செயல்படுத்துவதற்காக (operationalize) படிப்படியான அமல்பாட்டு திட்டங்களையும் (implementation plan) அதற்கான ஆய்வுகளையும் வழங்குகின்றது.

### *பேரிடர் ஆபத்து குறைப்பு மீதான ஆசிய அமைச்சர்கள் மாநாடு*

- பேரிடர் ஆபத்து குறைப்பு மீதான ஆசிய அமைச்சர்கள் மாநாடு (Asian Ministerial Conference on Disaster Risk Reduction -AMCDRR) அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது.
- இம்மாநாட்டில் பேரிடர் ஆபத்து குறைப்பிற்காக 10 குறிப்புகள் உடைய நிரல்கள் (10-point agenda) வரையறுக்கப்பட்டுள்ளன.
- இதனுடைய முதல் நிரலின் கீழ், ஆசியப் பிராந்தியத்தின் பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்புகளை (disaster resilient infrastructure) மேம்படுத்துவதற்காக, ஓர் பேரிடர் ஆபத்து குறைப்பு கூட்டணியையோ அல்லது மையத்தையோ கட்டமைக்க பிற கூட்டளிப்பு நாடுகள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து இந்தியா செயல்படும் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## கண்டிகோட்டா கோட்டை

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கடப்பாவில் அமைந்துள்ள கண்டிகோட்டா கோட்டையினை (Gandikota Fort) பராமரித்துப் பேணிப் பாதுகாப்பதற்கு டால்மியா பாரத் குழுவானது (Dalmia Bharat Group) மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சார அமைச்சகம் (Union ministry of Tourism and Culture) மற்றும் இந்திய தொல்பொருள் கணக்காய்வு நிறுவனத்துடன் (Archaeological Survey of India) ஓர் புரிந்துணர்வை (understanding) ஏற்படுத்தியுள்ளது.



- கடப்பாவில் அமைந்துள்ள இந்த கண்டிகோட்டா கோட்டையானது சில வேளைகளில் தெற்கின் கிராண்ட் கென்யான் (Grand Canyon of the South) எனவும் அழைக்கப்படுகின்றது.
- பொறுப்புமிகு சுற்றுலாவை (responsible tourism) திறம்பட்ட முறையில் மேம்படுத்த அனைத்து சுற்றுலா மேம்பாட்டு பங்களிப்பாளர்களிடையே ஒருங்கிணைவை ஏற்படுத்துவதற்கான ஓர் கூட்டிணைவு முயற்சியே (collaborative effort) Adopt a Heritage: Apni Dharohar, Apni Pehchaan என்ற திட்டமாகும்.

## 29-வது கடல்சார் எல்லைக்கோடு சந்திப்பு

- இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையிலான 29-வது கடல்சார் எல்லைக்கோடு (Indo-Sri Lanka Maritime Boundary Line) சந்திப்பு இந்திய கடற்படைக் கப்பலான ‘சுமித்ராவில் நடைபெற்றது. இந்த சந்திப்பு இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள ஜாப்னா மாவட்டத்தில் அமைந்துள்ள காங்கேசன் துறையில் ஆண்டுக்கு ஒருமுறை நடப்பதாகும்.
- இந்த சந்திப்பானது இருநாட்டு கடற்படை மற்றும் கடலோரக் காவல்படைகளுக்கிடையே செயல்பாட்டுத் தயார்நிலை மற்றும் உறவுகளைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 28-வது கடல்சார் எல்லைக்கோடு சந்திப்பு (Meeting) கடந்த ஆண்டு (2017) மே 19 அன்று இலங்கை கடற்படைக் கப்பலான ‘சயூராவில்’ நடைபெற்றது.




# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய மேம்பாட்டு வங்கியின் 51-வது வருடாந்திர மாநாடு

- பிலிப்பைன்ஸ் அரசு மணிலாவில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் 51-வது வருடாந்திர மாநாட்டை நடத்தியது.
- 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆசிய மேம்பாட்டு வங்கி, வறுமை நிலையிலிருந்து மக்களை உயர்த்துவது (To lift people out of poverty) மற்றும் சமூகத்திற்கு அதிகளவில் பயனளிக்கும் திட்டங்களுக்கு நிதியளிப்பது ஆகியவற்றை கட்டாயமான ஒன்றாகக் கொண்டுள்ளது.




- துவங்கிய காலம் முதல் வழக்கமாக (Conventionally) ஜப்பான் ஆளுநரால் தலைமையேற்கப்படும். இவ்வங்கிக்கு அதிகளவிலான நிதி ஜப்பான் மற்றும் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கப் பெறுகிறது.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது, ஆசியப் பகுதியைச்சேர்ந்த 48 நாடுகளுடன் சேர்த்து 67 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிறுவன உறுப்பினரான இந்தியா, தற்போது நான்காவது மிகப்பெரிய பங்குதாரராக இருப்பதுடன், 2010-ஆம் ஆண்டிலிருந்து ஆசிய மேம்பாட்டு வங்கியின் மிகப்பெரிய கடன் பெறுநராகவும் உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்


### பிரதான் மந்திரி வய வந்தன யோஜனா

- பிரதான் மந்திரி வய வந்தன யோஜனா (Pradhan Mantri Vaya Vandana Yojana-PMVVY) திட்டத்தின் கீழ் முதலீட்டு வரம்பை (investment limit) 7.5 லட்சத்திலிருந்து 15 லட்சமாக அதிகரிக்க பிரதமர் தலைமையிலான மத்திய கேபினேட் குழுவானது அனுமதி வழங்கி உள்ளது.
- பிரதான் மந்திரி வய வந்தன யோஜனா திட்டமானது வயதான காலத்தின் போது சமூகப் பாதுகாப்பினை வழங்குவது (social security), 60 வயது மற்றும் அதற்கு மேலான வயதுடையவர்களைப் பாதுகாப்பது ஆகிய நோக்கங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (e Insurance Corp -LIC) மூலம் அமல்படுத்தப்படுகின்றது.
- நிச்சயமற்ற சந்தை நிலைமைகள் காரணமாக வட்டி வீதத்தில் எதிர்காலத்தில் ஏற்படும் சரிவுகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.
- பிரதான் மந்திரி வய வந்தன யோஜனா திட்டமானது 10 ஆண்டு காலத்திற்கு ஆண்டிற்கு 8 சதவீதம் எனும் அளவிலான உத்திரவாதமுடைய வருமான அளவின் அடிப்படையில் (guaranteed rate of return of 8 percent) உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத்தை பயனாளிகளுக்கு வழங்குகின்றது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

### ஸ்வயம்

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 'ஸ்வயம்' எனும் முன்முயற்சியை துவங்கியுள்ளது. MOOC (Massive Open Online Course) எனப்படும் மிகையான திறந்தநிலை இணையதள படிப்புத் தளமான ஸ்வயத்தினைப் பயன்படுத்தி 1.5 மில்லியன் உயர்கல்வி ஆசிரியர்களின் தகுதிமுறையை இணையதளவழியில் மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இதன் முதல் கட்ட செயலாக்கத்தின் கீழ் 75 துறை சார்ந்த தேசிய வள மையங்கள் (Discipline-specific National Resource Centres) அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மத்தியப் பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் மீதான மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசியத் திட்டத்தின் கீழ் வரும் மையங்கள், IISCS, IUCAA, IITs, IISERs, NITs, மாநில பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மானியக் குழுவின் மனிதவள மேம்பாட்டு மையங்கள், தொழில்நுட்ப ஆசிரியர்களின் பயிற்சிக்கான தேசிய நிறுவனங்கள் (National Institutes for Technical Teachers Training - NITTTR), IIITs, திறந்தநிலை பல்கலைக்கழகங்கள் ஆகியவை தேசியவள மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஸ்வயம் (Study Webs of Active Learning for Young Aspiring Minds – SWAYAM) என்பது 9-ஆம் வகுப்பு முதல் முதுநிலைப் பட்டப்படிப்புகள் வரையில் அனைத்து விதமான படிப்புகளையும் கொண்டிருத்தல், வகுப்பறையிலேயே பாடம் கற்றுத்தருதல் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப தளமாகும்.




# மாநிலச் செய்திகள்

## டிஜிட்டல் முறையில் கையெழுத்திடப்பட்ட ஆவணம்

- டிஜிட்டல் முறையில் கையெழுத்திடப்பட்ட நில ஆவண ரசீதுகளை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா உருவாகியுள்ளது.
- இந்த ஆவணங்களானது 7/12 ஆவண ரசீதுகள் எனவும் அழைக்கப்படுகின்றது.
- 7/12 ஆவண இரசீதுகளானது நிலத்தினுடைய உரிமையாளர்களைப் பற்றி விவரம் தெரிவிக்கின்ற மிக முக்கிய ஆவணமாகும்.
- இவை கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொழுது விவசாயிகளால் முதன்மையாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

## சிந்து துர்க் - விமான நிலையம்

- மகாராஷ்டிரா மாநிலத்தின் சிந்துதுர்க் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய விமான நிலையத்தின் கட்டுமானப் பணி 2018-ஆம் ஆண்டின் ஜூன் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த புதிய விமான நிலையமானது சிந்துதுர்க் மாவட்டத்தில் பருலே சிபி (Parule Chipi) எனும் இடத்தில் அமைய உள்ளது.
- தற்சமயம் மகாராஷ்டிரா மாநிலத்தில் மூன்று சர்வதேச விமான நிலையங்களும், 13 உள்நாட்டு விமான நிலையங்களும் (domestic airports) உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸ்திரேலியாவின் புதிய கிரிக்கெட் பயிற்சியாளர்

- கிரிக்கெட் விளையாட்டின் மூன்று வடிவிலான போட்டிகளுக்கும் ஆஸ்திரேலியாவின் தேசிய ஆண்கள் கிரிக்கெட் அணிக்கு புதிய பயற்சியாளராக முன்னாள டெஸ்ட் தொடக்க கிரிக்கெட் வீரரான ஜஸ்டின் லாங்கரை (Justin Langer) கிரிக்கெட் ஆஸ்திரேலியா அமைப்பு (Cricket Australia) நியமித்துள்ளது




- கிரிக்கெட் ஆஸ்திரேலியா அமைப்பானது ஆஸ்திரேலியாவின் தேசிய கிரிக்கெட் அமைப்பாகும்.
- ஜஸ்டின் லாங்கர் நான்கு ஆண்டு காலத்திற்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவரது பதவிக் காலத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது இரு ஆஷஸ் தொடர்களிலும் , 2019-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உலகக் கோப்பையிலும், 2020-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் உலக டி20 கோப்பையிலும் விளையாட உள்ளது.

## WBC ஆசியாவின் ஆண்டிற்கான பெண் சாம்பியன்

- சிங்கப்பூர் நாட்டினைச் சேர்ந்த தொழில்முறை குத்துச்சண்டை வீராங்கனையான (Professional boxer) நூர்ஷாஹிதா ரோஸ்லியே (Nurshahidah Roslie) உலக குத்துச்சண்டை கவுன்சிலின் (World Boxing Council-WBC) ஆசியாவின் ஆண்டிற்கான பெண் சாம்பியனாக (WBC Asia's Female Champion of the Year) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஆசிய குத்துச் சண்டை கவுன்சில் (Asian Boxing Council) என்று முறையாக அழைக்கப்படும் உலக குத்துச் சண்டை கவுன்சில் ஆசியா (WBC Asia) அமைப்பானது உலக குத்துச்சண்டை கவுன்சிலின் இணை (affiliate) அமைப்பாகும்.
- உலக குத்துச்சண்டை கவுன்சில் ஆனது உலகின் நான்கு முக்கிய குத்துச்சண்டைக்கான அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளில் (Boxing sanctioning body) ஒன்றாகும்.
- உலகின் பிற முக்கிய அங்கீகரிக்கப்பட்ட குத்துச் சண்டை அமைப்புகளாவன.
  - உலக குத்துச் சண்டை கழகம்-(World Boxing Organisation-WBO)
  - சர்வதேச குத்துச் சண்டை சம்மேளனம் (International Boxing Federation -IBF)

- உலக குத்துச் சண்டை சங்கம் (World Boxing Association -WBA)



- - - - - - - - - - - - - - -